இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பிற்கிணங்க, கோவை மாவட்டத்தில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், மற்றும் பொள்ளாச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் மொத்த எடை 5 பவுனுக்குட்பட்டு கடன் பெற்று அரசாணைக்குட்பட்டு அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ள 47567 பயனாளிகளுக்கு ரூ.199.52 கோடி மதிப்பிலான கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நகைக்கடன் பெற்ற கூட்டுறவு வங்கி கிளைகளில் தள்ளுபடி சான்றிதழ் வழங்கப்படுகிறது. மேலும் மொத்த எடை 5 பவுனுக்கு உட்பட்டு, கடன் பெற்றுள்ள தகுதியுடைய பயனாளிகள் கடன் பெற்றுள்ள கூட்டுறவு வங்கியை அனுகி கடன் தள்ளுபடி சான்றிதழினை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

## 21வது வார்டில் அடிப்படை வசதி கோரி மேயரிடம் மனு



அடிப்படை வசதி கோரி கோவை மேயரிடம் மனுவினை வழங்கிய போது.

தி கோவை மெயில்

கோவை மாநகராட்சி 21 வது வார்டுக்கு உட்பட்ட சரவணம்பட்டியில் உள்ள பாரதியார் வீதி, விநாயகபுரம் குடியிருப்போர் மக்கள் சார்பாக அடிப்படை வசதிகள் செய்யக்கோரி கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமாரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

கோவை மாநகராட்சி 21 வது வார்டுக்கு உட்பட்ட சரவணம்பட்டியில் உள்ள பாரதியார் வீதி, விநாயகபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்கு வசித்து வரும் பொதுமக்கள், சாலை வசதி, சாக்கடை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கோரி கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமாரிடம் கோரிக்கை மனு ஒன்றை வழங்கினர். 21 வது வார்டு கவுன்சிலர் பூங்கொடி சோமசுந்தரம் மற்றும் அவரது கணவர் சோமசுந்தரம் ஆகியோர் தலைமையில் பொதுமக்கள் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட மனுவில், கோவை சரவணம்பட்டியில் உள்ள பாரதியார் வீதி, விநாயகபுரம், வார்டு எண்.21 ல் வசித்து வருகிறோம். இந்த பகுதியில் சாக்கடை வசதிகள் இல்லாத நிலையிலும், ரோடுகள் பழுதடைந்த நிலையிலும் மற்றும் தெருவிளக்குகள் மிகவும் குறைவாகவும் உள்ளது, கடந்த ஆட்சியில் பல வருடங்களாக யாரும் மேம்படுத்த முன்வரவில்லை.

இதனால் மக்கள் மழை காலத்தில் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அடிக்கடி சிறு சிறு விபத்துகள் நடக்கின்றன. ஆகையினால் சாக்கடை, ரோடு, சீரான குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகளை மேம்படுத்தி தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேஜ் 3 சலூனின் 2வது கிளை துவக்கம்

தி கோவை மெயில்

இந்திய அளவில் அழகு கலை மற்றும் ஆரேக்கிய தொழிலில் முன்னணி வகித்து வரும் சி.கே குமரவேல், வீணா குமரவேல் ஆகியோரின் தொலைநோக்கு பார்வையில் உருவானது தான் பேஜ் 3. இருபது ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் இந்த அழகு கலை சேவையை அளித்துள்ளது.

இந்நிலையில், கோவை சாய்பாபா காலனியில் அவினாசிலிங்கம் கல்லூரி சாலையில், ஜிசிடி அருகில் 4000 சதுரடியில் புதுமையான வகையில் அருமையான உள் அலங்கார அமைப்பில், சொகுசான அனுபவத்தை பெறும் வகையில் பேஜ் 3 சலூனின் இரண்டாவது கிளை திறக்கப்பட்டுள்ளது. இதனை முன்னணி பாடகர் சக்திஸ்ரீ கோபாலன், வனிதாமோகன் மற்றும் தனலட்சுமி ஜெயச்சந்திரன் மற்றும், சி.கே.குமரவேல், வீணா குமரவேல் ஆகியோர் பங்கேற்று துவக்கி வைத்தனர்.



பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது.

இந்த சலூனில் பயிற்சி, சான்றிதழ் பெற்ற மற்றும் நிபுணத்துவம் கொண்ட பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர். தென்னிந்திய அளவில் பல திரைப்பட தொழில் நிறுனங்களுடன் இணைந்து திரை நட்சத்திரங்களுக்கும் பணியாற்றி வருகிறது.

சர்வதேச அளவில் திறனும், அனுபவமும் கொண்ட சண்முககுமார் இந்த சலூன் தொடரின் தலைமை செயல் அதிகாரியாகவும், இயக்குனராகவும் பணியாற்றுகிறார். கோவையில் செயல்பட்டு வரும் இந்த சலூன்களின் உரிமையாளர்களாக லதா மற்றும் சண்முககுமார் உள்ளனர். ஐஎஸ்ஓ 9001 மற்றும் 14000 சான்று பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சங்கரா கல்லூரியில் பல் மருத்துவ முகாம்

தி கோவை மெயில்

சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியின், எம்பிஏ துறை சார்பில் பல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது, தலைமை விருந்தினராக கோயம்புத்தூர் பிரைம் 32 பல் மருத்துவத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பலவாணன் மற்றும் டாக்டர் பெலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியின் இணைச் செயலர் கல்யாணராமன் தலைமை வகித்து, குத்துவிளக்கேற்றி, தலைமை உரையாற்றி முகாமை துவக்கி வைத்தார். முதல்வர் டாக்டர் ராதிகா வரவேற்று பேசினார்

டாக்டர் அம்பலவாணன் பல் பற்றிய நுணுக்கங்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார், மேலும் அதை எவ்வாறு பராமரிப்பது மற்றும் ஆரோக்கியமாக வைத்திருப்பது என்பது பற்றி விளக்கினார். தற்போது பல் மருத்துவமனைகள் வழங்கும் சேவை குறித்து எடுத்துரைத்தார். பல் மருத்துவம் இனி விலை உயர்ந்ததல்ல என்று கூறினார்.

# உயரப் பறக்கும் பெட்ரோல், கேஸ் விலை

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

புலி வருகிறது புலி வருகிறது என்று சொல்லிக் கொண்டே இருந்துவிட்டு உண்மையிலேயே இப்போது புலி வந்திருக்கிறது. பல மாதங்களாக உயர்த்தப்படாமல் இருந்த கேஸ், பெட்ரோல், டீசல் விலை ஏற்றப்பட்டு இருக்கிறது. இதற்கு நிர்வாக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் பாதிக்கப்படுவது என்னவோ கீழ்த்தட்டு மற்றும் நடுத்தர குடும்பத்து மக்கள்தான்.

பெட்ரோல், டீசல் விலை சில ரூபாய் உயர்வு தான் என்கிறார்கள். ஆனால் இதன் தொடர்ச்சியாக அனைத்து பொருள்களின் விலைவாசி உயர்வது தவிர்க்க முடியாததாகும்.

இன்றைய காலகட்டத்தில் பல கிராமங்களிலும் கூட கேஸ் இல்லாமல் சமையல் செய்ய முடியாது என்ற நிலை வந்திருக்கிறது. நகர பகுதிகளைப் பொறுத்தவரை கேஸ் இல்லை என்றால் பருப்பு வேகாது சோறும் வேகாது என்பதுதான் உண்மை.

சில ஆண்டுகளுக்கு முன்பு 600 ரூபாய்க்கு இருந்த கேஸ் விலை இன்று படிப்படியாக விலை உயர்ந்து ஆயிரத்தை தொடப் போகிறது. அந்த கடைசிப் படி தான் இந்த 50 ரூபாய் விலை உயர்வு.

இதே முறையில் வணிகரீதியான கேஸ் சிலிண்டர்கள் விலையும் உயர்ந்து உணவை விற்கும் உணவகங்களின் உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்து உள்ளது. இப்பொழுது இந்த 50 ரூபாய் விலை உயர்வு சத்தமில்லாமல் நடுத்தர மக்களின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டு இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக வேலைவாய்ப்பு, சம்பளம் குறைந்து நடுத்தர வர்க்கம் தத்தளித்து வருகிறது. குறிப்பாக குழந்தைகளுக்கு பள்ளி கட்டணத்தை கட்ட வேண்டிய பெற்றோர்கள் பள்ளிக் கட்டணத்திற்கும், போக்குவரத்திற்கும் பைசா எண்ணி எண்ணி செலவழித்து வரும் நிலையில் இந்த ஐம்பது ரூபாய் விலை உயர்வு இனி எப்பொழுதெல்லாம் கேஸ் விலை உயரும் என்ற பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் பட்ஜெட்டில் ஆயிரம் ரூபாய் சிலிண்டருக்கு ஒதுக்குவது என்பது வாடகை வீட்டில் வசித்து கொண்டு பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் நடுத்தர வர்க்கத்திற்கு பெரும் சுமைதான்.

இன்னொருபுறம் கூடுதல் போனஸ் போல கேஸ் விலையுடன், விலை உயர்வாக பெட்ரோல், டீசல் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. இன்றைய நகர மயமான சூழலில் இருசக்கர வாகனம் இல்லாதவர்கள் குறைவே. ஒரு லிட்டர் பெட்ரோல் என்பது மிகக் குறைந்த பயன்பாட்டுக்கே பயன்படுகிறது. இப்படி ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்றும் உயர்ந்து கொண்டே போனால் இரு சக்கர வாகனத்தை மக்கள் தள்ளிக்கொண்டே போக வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும்.

இன்றைய நகர சூழலில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு வேலைக்குச் செல்ல பலரும் இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி வருகிறார்கள். சென்னை போன்ற ஒரே ஒரு நகரத்தை தவிர வேறு எங்கும் மெட்ரோ ரயில் மற்றும் புறநகர் ரயில் கிடையாது. இந்த நிலையில் வேலை வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது எப்படி, வேலைக்கு போவது எப்படி என்பது புரியாத நிலையில் நடுத்தர வர்க்கம் உள்ளது.

பொதுவாக கோவை போன்ற மாவட்டங்கள் கொரோனாவுக்கு பிறகு சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலப்பொருள் விலை உயர்வால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் தொழிற்சாலைகள் மிகவும் சிரமப்படுவதோடு, அது சார்ந்த தொழிலாளர்களும் சிரமப்படுகிறார்கள்.



**இன்றைய காலகட்டத்தில் பல கிராமங்களிலும் கூட கேஸ் இல்லாமல் சமையல் செய்ய முடியாது என்ற நிலை வந்திருக்கிறது. நகர பகுதிகளைப் பொறுத்தவரை கேஸ் இல்லை என்றால் பருப்பு வேகாது, சோறும் வேகாது என்பதுதான் உண்மை. சில ஆண்டுகளுக்கு முன்பு 600 ரூபாய்க்கு இருந்த கேஸ் விலை இன்று படிப்படியாக விலை உயர்ந்து ஆயிரத்தை தொடப் போகிறது.**

அதைப்போலவே டெல்டா மாவட்டங்களில் கடந்த மாதங்களில் பருவம் தப்பி பெய்த மழையால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் சில மாதங்கள் அமைதியாக இருந்த பெட்ரோல் விலை உயர்வும், கேஸ் விலை உயர்வும் பறக்கத் தொடங்கி இருக்கின்றன. தனியாக பார்க்கும் போது கேஸ் 50 ரூபாய், பெட்ரோல், டீசல் கொஞ்சம் விலை உயர்வு என்கிற மாதிரி தெரியும். ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு விலை எவ்வளவு இருந்தது என்று பார்க்கும் போது தான் சிக்கல் தொடங்குகிறது. அதுவும் பெருந்தொற்றுக்கு பிறகான காலகட்டத்தில் மக்களின் சுமையை இது கூட்டுவதோடு இது தொடர்பான அனைத்து பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாக அமையும்.

இப்போதுதான் கொரோனாவின் மூன்றாம் அலை முடிந்திருக்கிறது. இன்னும் பிரான்ஸ் ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். வருகின்ற ஜூன் மாதம் இந்தியாவிற்கும் நான்காம் அலை வரலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது. தமிழக அரசும் கூட முக கவசம் அணிவதை கைவிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு உள்ளது.

எனவே இந்த நிலையில் விலை உயர்வை நிர்வகிக்கும் பொறுப்பில் பெட்ரோல் நிறுவனங்கள் இருந்தாலும் மக்கள் நலனை பாதுகாப்பவர்கள் என்ற முறையில் மத்திய அரசு தலையிட்டு இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். மக்கள் பிரதிநிதிகளும் அதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் குறிப்பிட்ட காலத்திற்காவது விலை உயர்வு இருக்காது என்ற நம்பிக்கையை மக்களிடம் விதைக்கவேண்டும். மக்கள் பொருளாதார திட்டமிடுதலுக்கு தயாராகும் வகையில் இந்த விலை உயர்வு அமைய வேண்டும்.

ஏனென்றால் இந்த விலை உயர்வு மூலம் இது தொடர்பான பொருட்கள் அனைத்தும் விலை ஏறும்போது மக்களின் வாழ்க்கை நிலை கேள்விக்குறியாகி விடும்.

---

### விருதுநகர் ஆர்.டி.ஓ பாஸ்கரன்
## குடும்பத்துடன் உடல் உறுப்பு தானம்

**தி கோவை மெயில்**

உடல் உறுப்புதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர்.

கோவை அரசு மருத்துவமனையில் ஒரே நேரத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் தங்களுடைய உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர்.

விருதுநகரில் ஆர்டிஓ ஆக பணிபுரிந்து வருபவர் பாஸ்கரன். இவருடைய இல்லம் கோவையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குடும்பத்தில் இவருடைய மகன், மகள் மற்றும் யாராவது பிறந்தநாள் என்றால் அப்போது ரத்த தானம் செய்வதை வழக்கமாகக் கொண்டு வருகின்றனர். குடும்ப உறுப்பினர்களும் மகிழ்ச்சியோடு ரத்ததானம் செய்து வந்துள்ளனர். இவர் தன்னுடைய மகனின் 22 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரும், அவருடைய மகன், மகள், மனைவி மற்றும் மருமகன் ஆகியோர் உடல் உறுப்புகளை தானம் செய்துள்ளனர். இதுவரை மொத்தம் இருபத்தி மூன்று முறை இரத்த தானம் செய்துள்ளார் பாஸ்கரன்.

மதுரையில் இவர் ஆர்டிஓ வாக இருந்த பொழுது குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரும் கண்தானம் செய்திருக்கின்றனர். இன்றைக்கு மீதம் இருக்கக்கூடிய அத்தனை முக்கிய உறுப்புகளையும் தானம் செய்துள்ளனர்.

உடல் உறுப்பு சார்ந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே இத்தனை நாட்களாக இவர் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது.



ஆர்.டி.ஓ பாஸ்கரன் மற்றும் அவரது குடும்பத்தினர்.

---

## இந்துஸ்தான் கல்லூரியில் வ.உ.சி விருது வழங்கும் விழா



கல்லூரியில் நடைபெற்ற வ.உ.சி விருது வழங்கும் விழாவில் விருது பெற்றவர்கள். உடன் மொழித்துறையின் கணித்தமிழ்பேரவை உறுப்பினர்கள்.

**தி கோவை மெயில்**

இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி மொழித்துறையின் கணித்தமிழ்பேரவை சார்பாக கப்பலோட்டிய தமிழர் வ.உ.சியின் 150 வது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வாக தமிழுக்கு பல்வேறு நிலைகளில் பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்குக் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் தலைமை தாங்கினார். கல்லூரியின் செயலர் பிரியா சதிஷ்பிரபு முன்னிலை வகித்தார். கல்லூரி வளாகத்திற்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர் வ.உ.சி அவர்களின் பேரன் சி.வா.சிதம்பரம் அவர்கள் தேசியக் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து தமிழ்த்துறைப் பேராசிரியரும், கணித்தமிழ்ப்பேரவையின் ஒருங்கிணைப்பாளருமான கார்த்திக் வரவேற்புரை வழங்கினார். விழாவில் சிறப்புரை வழங்கிய முதல்வர் பொன்னுசாமி கப்பலோட்டிய தமிழர் வ.உசி-யின் அளப்பரிய தியாகங்கள் குறித்தும் இன்றைய தலைமுறை வ.உ.சியைக் கொண்டாடுகிறது என்றும் மறக்கக் கூடாத மாபெரும் தலைவர் வ.உ.சி என்றும் பேசினார்.

இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த வ.உசியின் பேரனும் வாலேஸ்வரனாரின் புதல்வருமான சி.வா.சிதம்பரம், வ.உ.சி யின் 13 விதமான பன்முகத்திறமைகள் குறித்துப் பேசினார். பதிப்பாசிரியர், உரையாசிரியர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், முதல் தொழிற்சங்கம் அமைத்தவர், சமூக நீதிக்குப் போராடியவர், பெண்விடுதலைக்குக் குரல் கொடுத்தவர், வழக்கறிஞர், சுதேசி நிறுவன நிர்வாகி, சுதந்திரப் போராட்ட வீரர், சிறந்த ஆன்மீகவாதி என்பன போன்ற வ.உசி-யின் பன்முகத்திறமைகள், ஆளுமைகள் குறித்தும் உரையாற்றினார்.

தமிழுக்குப் பல்வேறு நிலைகளில் உழைத்தத் தமிழார்வலர்களுக்கு இவ்விழாவில் சிறப்பு செய்யும் விதமாக வ.உ.சி விருதுகள் 2022 என்ற விருது வழங்கப்பட்டன.

---

## ரோட்டரி சார்பில் அரசுப் பள்ளியில் வகுப்பறைகள்



அரசுப் பள்ளியில் 85 லட்சம் ரூபாய் செலவில் அமைத்த 8 வகுப்பறைகளை அமைச்சர் செந்தில் பாலாஜி திறந்து வைக்கிறார்.

**தி கோவை மெயில்**

நரசிபுரத்தில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கோவை டெக்ஸிட்டி ரோட்டரி கிளப் சார்பில், 85 லட்சம் ரூபாய் செலவில் அமைத்த 8 வகுப்பறைகளை தமிழ்நாடு மின்சாரம், கலால் மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சமீரான் முன்னிலை வகித்தார். ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3201 சமூக சேவை மாவட்ட தலைவர் சுப்ரமணியன், டெக்ஸிட்டி ரோட்டரி தலைவர் முகமது இர்பான், உறுப்பினர்கள் மாருதி, ரமேஷ் பொன்னுசாமி, அரவிந்த், செந்தில்ராஜூ, வைரவன், பிரிஜேஷ், ரெஜி மற்றும் மேனகா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ரோட்டரி டெக்ஸ்சிட்டி இயக்குனர் ரமேஷ் அனைவரையும் வரவேற்று பேசினார். ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் சமுதாய பொறுப்பு பங்குதாரர் மோல்டு மாஸ்டர்ஸ் (நான்கு வகுப்பறைகளுக்கு உதவியவர்) மற்றும் இந்த 85 லட்ச ரூபாய் வகுப்பறைகளை முடிக்க உதவியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி பேசுகையில், “மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும். ரோட்டரி கிளப் நிகழ்ச்சியில் பங்கேற்று வகுப்பறைகளை துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நானும் ஒரு ரோட்டரி கிளப் உறுப்பினர் என்பதில் பெருமையாக உள்ளது,” என்றார்.

---

## அடுத்தவரின் சந்தோஷத்திற்காக நமது விருப்பத்தை விட்டுக்கொடுக்கலாமா?

**தி கோவை மெயில்**

சமூக சூழலில் வாழும்போது நம் தனிப்பட்ட விஷயம் பற்றி முடிவெடுக்கும்போது, மற்றவர்களின் விருப்பத்திற்கும் மதிப்பு கொடுக்க வேண்டியுள்ளது. எனில், யாருடைய சந்தோஷம் இதில் முக்கியம்? அடுத்தவரின் சந்தோஷத்திற்காக நமது விருப்பத்தை விட்டுக்கொடுக்கலாமா? ஒரு நகைச்சுவைக் கதை ஒன்றைக் கூறி சத்குரு பதிலளிக்கிறார்.

கேள்வி: என் திருமணம் மிக எளிமையாக நடக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால், நான் ஒரே மகன் என்பதால், அதை ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்று என் பெற்றோர் அடம் பிடிக்கிறார்கள். அவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக என் லட்சியத்தை விட்டுக் கொடுப்பதா?



சத்குரு: ஆடம்பரமான திருமணம் பற்றிய கேள்வியாக மட்டுமே இருந்திருந்தால், இதை வேறுவிதமாக அணுகலாம். ஆனால், ‘என் சந்தோஷம் முக்கியமா, என் பெற்றோரின் சந்தோஷம் முக்கியமா?’ என்று கேட்கிறீர்கள். இதற்கு நான் என்ன பதில் சொன்னாலும், அதைத் தவறாகப் புரிந்துகொண்டு உங்களுக்கு ஏற்றபடி திரித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அடுத்தவர்களுக்காக விட்டுக் கொடுக்கப்படும் சந்தோஷம்...?!

ஒன்று மட்டும் நிச்சயம்... இன்னொருவரின் சந்தோஷத்துக்காக விட்டுக் கொடுப்பதாகச் சொல்வது வெறும் கண்துடைப்பு. உண்மையில் இன்னொருவருடைய மகிழ்ச்சி உங்களுக்கு வேதனை தரும் என்றால், அதைச் செய்ய விரும்புவீர்களா? அடுத்தவர் மகிழ்ச்சியில் உங்களுக்கு மகிழ்ச்சி என்பதால்தானே அவர் விருப்பப்படி நடக்க முனைகிறீர்கள்?

சமூகத்தில் நீங்கள் தனி ஆள் அல்ல. எத்தனையோ பேர் உங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க, சாதுர்யமாக நீங்கள் பலவிதமானக் காய்களை நகர்த்துகிறீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியை உத்தேசித்துதான் அடுத்தவரின் மகிழ்ச்சியை நீங்கள் முன்வைக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் ஒரு பேரம் அது. ஏதோ ஒன்றைத் தியாகம் செய்வது கூட உங்கள் மன விருப்பத்தினால் தானே? அதை யாருக்காகவோ செய்வதாக ஏன் உங்களை ஏமாற்றிக்கொண்டு, வேண்டா வெறுப்பாகச் செய்கிறீர்கள்?

நீங்கள் ஒருவிதமாகச் செய்ய நினைத்தீர்கள். உங்கள் பெற்றோர் வேறுவிதமாகச் செய்ய சொன்னார்கள். அவர்களின் விருப்பத்துக்கு மதிப்பு கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டால், அதை ஆனந்தமாகச் செய்யுங்களேன். எதற்காகப் புலம்பிக்கொண்டே செய்கிறீர்கள்.

“என் விருப்பப்படி செய்தால், அவர்கள் காயப்பட்டுப் போவார்கள். அவர்கள் விருப்பப்படி செய்தால், என்னைக் குற்ற உணர்வு தாக்கும், அதுதான் குழப்பம்!”

தெளிவான முடிவு எடுக்கமுடியாத போதெல்லாம் பொறுப்பை மற்றவர் தலையில் கட்டிவிட்டு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக உங்கள் மனம் உங்களை ஏமாற்றுகிறது, அதுதான் விஷயம்!

**இந்த மாதிரி புத்திசாலி...?!**

மரணப் படுக்கையில் இருந்த தொழிலதிபர், தன் மகன்களை அழைத்தார், “என் சொத்தை உங்களுக்கு பிரித்துக் கொடுக்கிறேன். ஆனால், நான் சம்பாதித்த பணம் என்னுடன் வரவேண்டும் என்று விரும்புகிறேன். எனவே, என்னைப் புதைக்கும்போது, கூடவே ஆளுக்கு ஒரு லட்சம் பணத்தை வைத்துப் புதையுங்கள்” என்றார். அவர் இறந்த பிறகு, அவர் உடலைப் புதைத்துவிட்டுத் திரும்பும் வழியில் மூத்தவன் சொன்னான்... “நான் தவறு செய்துவிட்டேன். அப்பா இனிமேல் எண்ணிப் பார்க்கப் போகிறாரா என்ன என்று வெறும் பத்தாயிரம்தான் கவரில் வைத்தேன்!

இளையவன் சொன்னான்... “சேச்சே! இப்படியெல்லாம் அப்பாவை ஏமாற்ற எனக்கு இஷ்டமில்லை. நான் நேர்மையாக ஒரு லட்சத்துக்கு செக் எழுதி வைத்துவிட்டேன்!”

யார் புத்திசாலி? அடுத்தவரின் சந்தோஷத்தைக் காரணமாகச் சொல்லிக்கொண்டே, இரண்டாவது மகனைப்போல் காரியத்தை சாதித்துக்கொள்ளும் புத்திசாலிகள் இருக்கிறார்கள்.

உங்கள் மகிழ்ச்சி எது என்று தேர்வு செய்யும் உரிமை உங்களிடம்தான் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் எது? அது உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதில் இருந்தால், அதன்படி செய்யுங்கள். அல்லது அடுத்தவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், அதன்படி முடிவு எடுங்கள்.

வாழ்க்கை ஒரு நீரோட்டமாக மாறட்டும்!

ஆனால், எந்தவிதமான முடிவு எடுத்தாலும், அதற்கு ஒரு பின்விளைவு உண்டு என்பதை மறக்காதீர்கள். எது என்னவாக இருக்கும் என்பது பற்றிய தெளிவான சிந்தனை உங்களுக்கு வேண்டும். உங்களுக்கு ஏற்றதொரு பின்விளைவு கிடைக்க வேண்டும் என்றால், அதற்கேற்ற செயலில் இறங்குங்கள். முடிவு செய்துவிட்டால், எப்படிப்பட்ட பின் விளைவு வந்தாலும், அதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளத் தயாராகுங்கள்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைவிட, அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பதுதான் உங்கள் வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கும்.

வாழ்க்கையை ஒரு நீரோட்டம் போல் வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் சரி, இது தப்பு என்று எதனுடனாவது உங்களைப் பிணைத்துக் கொண்டீர்கள் என்றால், பாறை போல் இறுக்கமாகிவிடுவீர்கள்.

எந்தக் கருத்துடனும், எந்தத் தீர்மானத்துடனும், எந்த உணர்ச்சியுடனும் உங்களை உறைய வைத்துக்கொள்ளாதீர்கள். பாறை போல் இறுக, இறுக... புதிய அனுபவங்களை எதிர்கொள்ளும் திறனை இழந்துவிடுவீர்கள். உங்களை நீங்களே ஊனப்படுத்திக் கொண்டவராகி விடுவீர்கள்.

அதேபோல், சந்தோஷம் இல்லாமல் எதையும் செய்யாதீர்கள். ஆனந்தமாக இல்லாதிருப்பது மாபெரும் குற்றம்.

எதைச் செய்தாலும் அது உங்கள் ஆனந்தத்தின் வெளிப்பாடாக அமைந்துவிட்டால், இது சரியா, அது சரியா என்ற சந்தேகங்களே எழாது. இதுபோன்ற கேள்விகளும் மறைந்துவிடும்!

## நகர்(அ)வலம்

படங்கள்: சதீஸ் பாபு







கோவையில் பல இடங்களில் குப்பைகளை சரியாக எடுக்காததால் சாலையோரங்களிலும், தெருக்களிலும் குப்பைகள் ஆங்காங்கே காணப்படுகிறது. மேலும் சாக்கடையில் குப்பைகள் போடப்பட்டு அதை முறையாக அகற்றாததால் துர்நாற்றத்துடன் கொசு, பூச்சி தொல்லைகள் அதிகமாக உள்ளது என அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இடம்: கட்டபொம்மன் வீதி, கணபதி மற்றும் நியூ சித்தாபுதூர் சாலை, ராமகிருஷ்ணா சிக்னல், கோவை

## பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



சிறப்பு விருந்தினர் விஜயராகவன் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார்.

தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியின் 22 வது பட்டமளிப்புவிழா பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

272 இளங்கலை, 17 முதுகலை மற்றும் 5 முதுகலை டிப்ளமோ பட்டதாரிகள் பட்டங்கள் பெற்றனர்.

பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜெயசுதா வரவேற்புரையாற்றி, பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு பிரமாணத்தை வழங்கினார்.

பி.எஸ்.ஜி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், பட்டதாரிகளை வாழ்த்தி தலைமையுரையாற்றினார். பட்டதாரிகளுக்கு ஆர்வம், விடாமுயற்சி மற்றும் சிறந்து விளங்கும் திறன் தேவை என்று தெரிவித்தார். அவர் அவர்களின் மருத்துவ திறன்களை மேம்படுத்தி சமூகத்திற்கு சிறந்த சுகாதார செவிலியராக விளங்க ஊக்குவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை வேந்தர் விஜயராகவன் கலந்துகொண்டு, பட்டதாரிகளுக்கு விருதுகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து வாழ்த்திப் பேசிய அவர், நோயாளிகளைப் பராமரிப்பதில் செவிலியர் பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்த தொற்றுநோய் காலங்களின் போது முன்னணி வீரர்களாக செயல்பட்ட செவிலியர்களை பாராட்டி, பட்டதாரிகள் தங்கள் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமையை மேம்படுத்த வலியுறுத்தினார்.

கடந்த இருபத்தி ஏழு ஆண்டுகால பயணத்தில் பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியின் முன்னேற்றமானது தரவரிசை மற்றும் அங்கீகாரங்களில் முன்னிலை வகிக்கிறது. மேலும் கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சார போட்டிகளிலும் பல விருதுகளைப் பெற்றதற்காக முதல்வர் மற்றும் ஆசிரியர்களை வாழ்த்தினார்.

2015 ஆம் ஆண்டு மாணவி அனுசுயா, 2016 ஆம் ஆண்டு மாணவி க்ரிபா எல்சா மாத்தியூ, 2017 ஆம் ஆண்டு மாணவி நிஷ்மிதா விக்டர் ஷீபா, மிகச்சிறந்த மாணவ மாணவிகளுக்கான பட்டதாரி விருதை பெற்றார்கள்.

### உலக பக்கவாத அமைப்பின் சார்பில்

## கே.எம்.சி.ஹெச் மருத்துவமனைக்கு சிறந்த விருது



வேர்ல்டு ஸ்ட்ரோக் ஆர்கனைசேஷன் டயமண்ட் ஸ்டேட்டஸ் என்ற ஏஞ்சல் விருதை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனைக்கு வழங்கியது. இதனை கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் அருண் பழனிசாமி மற்றும் மருத்துவ குழு பெற்றுக் கொண்டனர்.

தி கோவை மெயில்

பக்கவாத நோய்க்கு இந்தியாவிலேயே அதிவிரைவு சிகிச்சை வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில் கோவையில் முதன்முறையாக கே.எம்.சி.ஹெச் மருத்துவமனைக்கு உலக பக்கவாத அமைப்பின் ஏஞ்சல் விருது வழங்கப்பட்டுள்ளது.

பக்கவாதத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு காலம் தாழ்த்தாமல் உடனடியாகவும், விரைவாகவும் உரிய சிகிச்சை அளிப்பது அவசியம் என மருத்துவர்களால் வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் இது போன்று பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதில் பல்வேறு அதி நவீன சிகிச்சை வசதிகளுடன் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை முதன்மையாக செயல்பட்டு வருகிறது.

பக்கவாதத்திற்கு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை அளிக்கும் சிகிச்சை இந்தியாவிலேயே மிகவும் விரைவானது என அங்கீகரிக்கப்பட்டு உலக பக்கவாத அமைப்பு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனைக்கு டயமண்ட் ஸ்டேட்டஸ் என்ற வைர அந்தஸ்துடன் ஏஞ்சல் விருதை வழங்கி கவுரவித்துள்ளது.

இந்நிலையில் இது குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு மருத்துவமனை அரங்கில் நடைபெற்றது.

மருத்துவமனையின் தலைவர் நல்ல.ஜி.பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இதில், இயக்குனர் அருண் பழனிசாமி மற்றும் பக்கவாத சிகிச்சை மருத்துவ குழுவினர், மருத்துவர்கள் பாஸ்கர், செந்தில் குமார், பிரகாஷ், ராஜேஷ் சங்கர் ஐயர், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கணேசன், சுரேஷ் ஜெயபாலன், பார்த்திபன், ரோஹித், அவசர சிகிச்சையின் தலைமை ஆலோசகர் டாக்டர் திலீபன், நியூரோ ரேடியாலஜிஸ்ட் ஸ்ரீராம் வரதராஜன், இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி குழு டாக்டர் மேத்யூ செரியன், பங்கஜ் மேத்தா, டாக்டர் கோபிநாதன், எட்மண்ட் ஆகியோர் பேசினர்.

பக்கவாத நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரு மணி நேரத்தில், மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை சீராக்குவது மிகமிக அவசியம். பொன்னான காலம் என்று கருதப்படும் முதல் 3 முதல் 4.5 மணி நேரத்திற்குள் நோயாளிக்கு உரிய சிகிச்சை அளிப்பது மிகவும் முக்கியத்துவம் ஆக உள்ளது. மேலும் பக்கவாதம் எந்த வயதிலும் ஏற்படலாம் என்றும் வயதுக்கும் பக்கவாதம் ஏற்படுவதுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் மருத்துவர்கள் கூறினர்.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் நவீன உபகரணங்களுடன் நரம்பியல் நிபுணர்கள், ரேடியாலஜி சிகிச்சை நிபுணர்கள், அவசரகால மருத்துவ நிபுணர்கள், செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவ உதவியாளர்கள் ஆகியோர் கொண்ட சிறப்புக் குழுவொன்று 24 மணி நேரமும் செயல்படுகிறது.

அதிநவீன மருத்துவம் மற்றும் பயிற்சி பெற்ற நிபுணர்களுடன் பக்கவாத நோயாளிகளுக்கு உலகத்தரமான சிகிச்சை வழங்குவதால், முழுமையான பக்கவாத சிகிச்சை மையமாக கே.எம்.சி.ஹெச் இருப்பதாக தெரிவித்தனர்.

மூளையில் இரத்தக் கட்டியை அகற்றி இரத்தம் உறைவதைத் தடுக்கும் உடனடி சிகிச்சை முறையான ஸ்ட்ரோக் ரெடி சிகிச்சை, பக்கவாத சிகிச்சைக்காக ஆசியாவின் முதல் நடமாடும் ஆம்புலன்ஸ் வசதியும் இங்கு உள்ளது குறிப்பிடதக்கது.

## ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூடில் பட்டமளிப்பு விழா



மாணவிக்கு பட்டத்தினை வழங்குகிறார் தலைமை விருந்தினர் கே.பி.ராமசாமி.

தி கோவை மெயில்

கோவை, ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆப் ரிசர்ச் இன் மேனேஜ்மென்ட் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த பட்டமளிப்பு விழா 2018-20 மற்றும் 2019-21 ஆண்டு மேலாண்மை படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு நிறுவன இயக்குநர் ஸ்ரீநிவாஸ் ராவ் தலைமையில் பட்டமளிப்பு அணிவகுப்புடன் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து அறக்கட்டளை, நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் கே.பி.ராமசாமி விழாவின் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார். அப்போது ரிஸ்க் எடுப்பது, ஆர்வமுள்ள துறைகளில் சிறந்து விளங்குவது மற்றும் சொந்த சாம்ராஜ்யத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதை வலியுறுத்தினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற, ஆர்எஸ்எம் ஆட்டோகாஸ்ட் நிர்வாக இயக்குநர் இளங்கோ, வாழ்க்கையில் நேர்மை, ஒழுக்கம், கடமை ஆகிய மூன்று அடிப்படை பண்புகளை கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். வெற்றிகரமான தொழில் முனைவோரின் கதைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் பங்கைக் கண்டறிந்து புரிந்து கொள்ளுமாறு மாணவர்களுக்கு அவர் பரிந்துரைத்தார்.

அறங்காவலர் உறுப்பினர்கள், நிறுவனம் நிறுவப்பட்ட நோக்கங்களையும் அதன் மாணவர்களின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்று கனவு காண்கிறது என்பதையும் வலியுறுத்தினர்.

### இந்துஸ்தான் கல்லூரியின்

## ஆராய்ச்சி குழுவிற்கு சர்வதேச விருது

தி கோவை மெயில்

கோவை இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், கணினி அறிவியல் மற்றும் அறிவாற்றல் துறையை சேர்ந்த ஆராய்ச்சி குழு சர்வதேச அளவில் விருது வென்றுள்ளது.

மலேஷியா மல்டிமீடியா பல்கலைக்கழகம் நடத்திய ஆராய்ச்சி கண்டுபிடிப்பு வணிகமயமாக்கல் மற்றும் தொழில் முனைவோர் காட்சிப் போட்டியில் பங்கு பெற்று அதிக வாக்குகள் பெற்ற கண்டுபிடிப்பாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விருது மார்ச் 23 ம் தேதி வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. துறை தலைவர் சசிகலா ஆராய்ச்சி அணி தலைவராகவும், அணி உறுப்பினராக உதவி பேராசிரியர்கள் ஜெயக்குமார் மற்றும் கவிப்ரியா, இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கௌதம் மற்றும் அஸ்வின் ஆகியோர் இந்த "ஒலியியல் அடிப்படையிலான தீயை அணைக்கும் கருவி" கண்டுபிடிப்பை உருவாக்கினர்.



வெற்றி பெற்ற குழுவினரை நிர்வாக அறங்காவலர் சரசுவதி கண்ணையன் வாழ்த்துகிறார்.

நிர்வாக அறங்காவலர் சரசுவதி கண்ணையன், செயலாளர் பிரியா சதீஷ் பிரபு, தலைமை செயல் அதிகாரி கருணாகரன், முதல்வர் பொன்னுசாமி ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

## சிஎஸ்கே - ஐசிஐசிஐ பிராண்ட் கிரெடிட் கார்ட் அறிமுகம்

தி கோவை மெயில்

சென்னை சூப்பர் கிங்ஸ் உடன் இணைந்து கூட்டு பிராண்ட் கிரெடிட் கார்டை அறிமுகப்படுத்தியுள்ளதாக ஐசிஐசிஐ வங்கி அறிவித்துள்ளது.

'சென்னை சூப்பர் கிங்ஸ் ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டு' என அழைக்கப்படும் இந்த கார்டு, சிஎஸ்கே அணியின் கிரிக்கெட் ரசிகர்களுக்காக பிரத்யேக சலுகைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அட்டை, விளையாட்டு ஆர்வலர்களுக்கு தங்களுக்கு பிடித்த அணிகளுடன் இணைவதற்கும், கிரெடிட் கார்டின் பலன்களை பெறுவதற்கும் வங்கியால் வழங்கப்படும் பிரத்யேகமான கூட்டு பிராண்ட் கிரெடிட் கார்டுகளின் மற்றொரு கூடுதல் அம்சமாகும். இந்த கூட்டு செயல்பாடு குறித்து ஐசிஐசிஐ அதிகாரி கூறுகையில், "ஐசிஐசிஐ வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு புதுமையான, சக்திவாய்ந்த மற்றும் தனித்துவமான மதிப்பு முன்மொழிவுகளை வழங்குவதில் செழுமையான பாரம்பரியத்தை கொண்டுள்ளது. சிஎஸ்கே உடன் இணைந்து கூட்டு பிராண்ட் கிரெடிட் கார்டை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இது சிஎஸ்கே ரசிகர்களுக்கு ஐசிஐசிஐ வங்கியிடமிருந்து பிரத்யேக சலுகைகள் மற்றும் தனித்துவமான வங்கி சலுகைகள் ஆகியவற்றை வழங்குகிறது." என்றார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட், தலைமை நிர்வாக அதிகாரி, விஸ்வநாதன் கூறுகையில், ஐசிஐசிஐ வங்கியுடன் இணைந்து கூட்டு பிராண்ட் கிரெடிட் கார்டை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த கூட்டு செயல்பாடு, நாடு முழுவதும் உள்ள எங்கள் ரசிகர்களுக்கு பலனளிக்கும். மேலும் மஞ்சள் நிறத்தை எங்கும் பரவச் செய்யும் என நம்புகிறோம் என்றார்.


YAMAHA RACING
The call of The BLUE
சீசன் யமஹா
கோடை விழா ஆஃபர்
CYGNUS RAY ZR 125 Fi
fascino 125 Fi
முன்பணம் ₹2999/-* மட்டுமே
₹4000/- வரை எக்ஸ்சேஞ் போனஸ்
*புல் டேங் பெட்ரோல் FREE
* Terms & Conditions Apply
சுங்கம்
சுந்தராபுரம்
96551 21000 / 96558 15000